**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வக்கோட்டை**
**OS No. 1/2021**

**பிரதிவாதிகள் தரப்பு 2 வது சாட்சி பன்னீர்செல்வம்** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.அரவிந்த், பெஞ்ச் கிளார்க் (பொறுப்பு) என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

## Cross Examination of DW.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பன்னீர்செல்வம் | வயது | : | 67 |
| தந்தை பெயர் | : | பெரமன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | பல்லவராயன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

நாள் : 27.02.2026

**வாதிதரப்பு குறுக்கு விசாரணை**

1) **எனது தந்தையின் பூர்வீக ஊர் என்ன என்றால் எனக்கு தெரியாது**, **நான் பல்லவராயன்பட்டியில் தான் பிறந்தேன்**. **நம்பூரான்பட்டி கிராமத்தில் எங்களுக்கு சொத்து உள்ளதா என்றால் வயல் உள்ளது**. **தாவா சொத்தின் சர்வே எண்**, **விஸ்தீரணம்**, **நான்கெல்லை மற்றும் சொத்தின் தன்மை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது**. **வாதி கிரையம் வாங்கிய ஆவணங்களில் நான் சாட்சிக்கையொப்பங்கள் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்**. **வாதி குடும்பத்திற்கு நடந்த பாகப்பிரிவினை ஆவணத்தில்**, **நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை**, 1999 **ஆம் ஆண்டு**, **சீனிவாசபிள்ளை வீட்டில் வைத்து நடந்த பாகப்பிரிவினையில் கையொப்பம் செய்தேன்**. **கடன் வாங்கவேண்டும் என்றால் அதற்கு ஆதரவாக அடமானப்பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும்**. **எனக்கு சொந்தமான சொத்துக்களை தஞ்சாவூர் பாரத ஸ்டேட் வங்கியில்** MOD **செய்து கொடுத்துள்ளேன்**. **கடனுக்காக கடன் பத்திரம் தான் எழுதிக்கொடுப்பார்கள் என்றாலும் பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொடுக்க மாட்டார்கள் என்றாலும் சரிதான்**.

2) **தாவா சொத்திற்கு பட்டா வாதி சுப்பையன் பெயரில் உள்ளது என்றாலும் தாவா சொத்திற்கு வாதி தான் வரி வகையறாக்கள் செலுத்தி வருகிறார் என்றாலும் அது எனக்கு தெரியாது**. **வாதி தாவா கிராமத்தில் ஒரு முறை ஊராட்சி மன்ற**

தலைவராக இருந்துள்ளார். அவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்த காலத்தில், சாலை அமைக்கப்பட்டது, பள்ளிக்கு மேற்கூரை கட்டப்பட்டது. சித்தமருத்துவத்திற்கு தனிக்கட்டிடம் கட்டப்பட்டது என்றால் சரிதான். அப்போது தான் குளம் சீர்செய்யப்பட்டது என்றால் வாரி அணை கட்டினார்கள். அவரது காலத்தில் தான் வடக்கு பிள்ளையார் கோவில் சீர்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி மரவியாபாரம் செய்து, நல்ல வருமானம் பெற்று வந்தார் என்றால் சரியல்ல. நம்பூரான்பட்டியில் வாதி, பிரதிவாதிகளுக்கு சொத்துக்கள் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அதன் சர்வே எண், விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. நம்பூரான்பட்டியில் உள்ள சொத்துக்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளார்களா என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு வாதிகள் குடும்பத்தில், சொத்துக்கள் எப்போது வாங்கினார்கள், எப்போது பிரித்துக்கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3) 1ஆம் பிரதிவாதி எனக்கு நெருங்கிய கூட்டாளி என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றாலும் 1ஆம் பிரதிவாதி அழைத்ததன் பேரில் வந்தேன் என்றாலும் சரிதான். எனக்கு வழக்கு சொத்துக்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.27 15:58:24 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**